Registered as a News Paper     மக்கள் 04     விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM     Peoples Daily     மக்கள் தினசரி

நாதம்- 03   திருவள்ளுவர் ஆண்டு 2023   ஆனி 09   (23 - 06 - 1992)   செவ்வாய்க்கிழமை   ஓசை: 126

## உணவுப் பொருள்களை பருத்தித்துறையில் இறக்குக

### -யாழ். அரச அதிபர் கோரிக்கை

காங்கேசன்துறைக்கு உணவுப் பொருள்களுடன் வரும் மரினாவ் கப்பலை பருத்தித்துறையில் இறக்க ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு யாழ். அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். இதுவரை காலமும் இக் கப்பல் காங்கேசன் துறை துறைமுகத்திலேயே உணவுப் பொருள்களை இறக்கிவந்தது. தற்போது வலி வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் (4ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கும் தமிழ்க்குழுக்களுக்கும் தொடர்பில்லை

### வீரச்சாவு

### லெப். சோழன்

பலாலிப்பகுதியில் 20 06 92 அன்று ஏற்பட்ட வெடி விபத்தில் விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் சோழன் (செலஸ்ரின் விஜயராஜ், சென்ஜேம்ஸ் வீதி, குருநகர்) என்பவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமதுவீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## புலிகளே தொடர்புடையவர்கள் தமிழ் அரசியல்வாதி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பு ஒன்றினைத் தவிர இனப்பிரச்சினையோடு ஈடுபாடு கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும், இனப்பிரச்சினைக்கும் சம்பந்தமே கிடையாது. இவ்வாறு கொழும்பிலுள்ள தமிழ் அரசியல்வாதி ஒருவர் தெரிவித்ததாக கொழும்பு ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கிராமிய தொழில்துறை அமைச்சர் எஸ் தொண்டமான் உள்ளிட்ட ஆறு தமிழ் கட்சிகள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசவை சந்தித்துப் பேசியது தொடர்பாக வெளியான செய்திகள் குறித்து சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் ஆதரவில்லாமல் எடுக்கப்படும் எந்த முடிவும் பயனற்ற ஓர் அப்பியாசமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைத் தேடுவதில் முனைந்து நிற்கும் தமிழ்க் கட்சிகள் இறுதியான முடிவை எட்டும்போது, விடுதலைப் புலிகளுக்கு ஏற்புடைய ஒரு தீர்வை நோக்கி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். விடுதலைப் புலிகள் ஏற்காத எந்தவொரு முடிவும் இனப் பிரச்சினையின் தீர்வுக்கு ஒவ்வாத முடிவாகவே அமையும் என்றும் அவ் அரசியல்வாதி தெரிவித்தார்.

## இ.தொ.கா. - தமிழ்க்குழுக்கள் புதிய திட்டம் தயாரிப்பு

[கொழும்பு]

''பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் எட்டுத் தமிழ் கட்சிகள் இணைந்து இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக ஒரு ...

இப்போது எமக்குத் தேவைப்படுவது தியாகம் கடந்த காலங்களில் சிலர், தமிழர் மத்தியிலிருந்து பல வீனமானதும், தன்னலப் ...

குரிய காரணமாகும். விடுதலைப் புலிகள் பிரச்சினையை அதன் ஆரம்ப காலத்தில் அணுகத்தவறியதால் தான் இன்று அது பூதாகரமாகியுள்ளது

### வீரச்சாவு

### 2-ம் லெப். மிருணன்
### 2-ம் லெப். துசிதன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் உன்னிச்சை பகுதியில் நலரைக்கட்டை என்னும் இடத்தில் இயக்கவேலை காரணமாக விடுதலைப் புலிகள் போராளிகள் சென்று கொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கினர்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இத்தாக்குதலில் இரண்டு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 2-ம் லெப்டினன்ட் மிருணன் (சதீஸ்-நாகலிங்கம் தவச்செல்வன் ஆரையம்பதி மட்டக்களப்பு), 2-ம் லெப்டினன்ட் துசிதன் (செல்வநாயகம் ரகுநந்தன், 9 ஆம் வட்டாரம் கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## களுத்துறை தடுப்புமுகாமில் 400 தமிழ் இளைஞர்கள்

களுத்துறையில் இருக்கும் தடுப்புக் காவல் முகாமில் ...

களப்பில் மனித உரிமைகள் குழுத்தலைவர் ஆசா பத்திரி ...

## வைத்தியசாலை பணிப்பாளர் குழு ஏமாற்றத்துடன் யாழ். திரும்பியது

### கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலைப்பணிப்பாளர்குழு முன்வைத்த முக்கிய கோரிக்கைகள் அனைத்தும் சுகாதார மகளிர் விவகார போதனாவைத்தியசாலைகள் அமைச்சினால் முற்றாக நிராகரிக்கப்பட்டது. இதனால் ஏமாற்றத்துடன் இக்குழுவினர் நேற்று யாழ். திரும்பினர்.

கடந்தவாரம் யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவும் பல முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு பணிப்பாளர் தலைமையில் கணக்காளர் மற்றும் இருவைத்திய கலாநிதிகள் அடங்கிய குழுவினர் கொழும்பு சென்றிருந்தனர் இவர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எக்ஸ்கதிர் இயந்திரம், அம்புலன்ஸ், சீமெந்து, வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் பற்றாக்குறை போன்ற முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டே அங்கு சென்றனர்.

இக்குழுவினர் மேற்படி கோரிக்கைகளை முன்வைத்து ஒன்றரை வருடங்களாகியும் இதுவரை இக்கோரிக்கைகளை நிறைவேற்ற மேற்படி அமைச்சு மறுத்துவருவது குறிப்பிடத்தக்கது

எக்ஸ்கதிர் இயந்திரம், அம்புலன்ஸ் வண்டி ஆகியவற்றை வழங்க கடந்த வருடம் அங்கீ [4 ஆம் பக்கம் பார்க்க]

## தீவகத்தில் கடமையாற்ற வைத்தியர்கள் மறுப்பு

சிறிலங்கா இராணுவ சுற்றிவளைப்பில் உள்ள பகுதிகளில் கடமைக்குச் செல்ல டாக்டர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளனர். கடந்த வருடம் இராணுவத்தினரால் முற்றுகைக்குள்ளாகிய தீவகப் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைக்குச் செல்லவே இவர்கள் மறுத்துள்ளனர்.

அண்மையில் கொழும்பு சென்ற யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் அங்கு கடமையாற்றும் டாக்டர்களில் சிலரை தீவகப்பகுதிக்கு கடமையாற்ற அனுப்பி வைக்குமாறு சுகாதார மகளிர் விவகார போதனா வைத்தியசாலைகள் அமைச்சு வேண்டுகோள் விடுத்தது.

இவ்வேண்டுகோளுக்கு பதிலளித்த பணிப்பாளர் இராணுவ முற்றுகைக்குள் உள்ள பகுதிகளில் சேவையாற்ற டாக்டர்கள் எவரும் முன்வர மாட்டார்கள். போதனா வைத்தியசாலையிலேயே டாக்டர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகிறது. இந்நிலையில் அங்கு டாக்டர்களை அனுப்புவது சாத்தியமற்றது எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரி

குழுவிடம் எட்டுத் தமிழ் கட்சிகள் இணைந்து இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக ஒரு பொதுவான திட்டத்தை சமர்ப்பிக்கவுள்ளன. இக்கட்சிகளின் கூட்டு ஆலோசனையை சிங்களக் கட்சிகள் ஏற்றுக் கொண்டால் இந்த வருட இறுதிக்குள் நாட்டில் சமாதானம் ஏற்பட்டு விடும்''

இவ்வாறு கிராமியக் கைத்தொழில்துறை அமைச்சர் திரு எஸ். தொண்டமான் சண்டே ரைபஸ் பத்திரிகைக்கு பேட்டி ஒன்றில் கூறியிருக்கிறார்.

அவர் அப்பேட்டியில் தொடர்ந்து கூறும் போது.

நீத காலங்களில் ... தமிழர் மத்தியிலிருந்து பல வீனமானதும், தன்னலப் போக்குமுடைய தலைமை தான் இன்றைய பிரச்சினைக் ... அணுகத்தவறியதால் தான் இன்று அது பூதாகரமாகியுயுள்ளது

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க்குழுக்கள் கோரிக்கை நியாயமானதாகும்

## - அமைச்சர் தொண்டமான்

(கொழும்பு)

தமிழ்க்குழுக்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் நியாயமானவை. அதனால் நான் அவற்றை ஆதரிக்கின்றேன் என்று அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வின் ஒரு அம்சமாக வடக்கு கிழ

(4 ஆம் பக்கம் பார்க்க)

களுத்துறையில் இருக்கும் தடுப்புக்காவல் முகாமில் சுமார் நூறு தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். இதேவேளை மட்டக்களப்பில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களைப் பார்வையிடவும் அவர்களது நலன்களைப் பேணவுமென மட்டக்களப்பில் மனித உரிமைகள் குழுவின் செயலகம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது என்று மட்டக்களப்பில் மனித ... குழுத்தலைவர் ஆசா பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார்.

எவரும் காணாமல் போனால் இந்த அலுவலகத்துடன் தொடர்புகொண்டு தகவல் தெரிவிக்கும்படியும். தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளோர் இம்சிக்கப்பட்டால் அது குறித்தும் தகவல் தரும்படியும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# தெல்லிப்பழை ஆஸ்பத்திரி மீண்டும் இயக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை அரச மருத்துவமனையை மீண்டும் பழைய இடத்தில் இயங்கவைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுவருகிறது

இம்முயற்சியில் சிறிலங்கா கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகமும், சுகாதார மகளிர் விவகார அமைச்சும் ஈடுபட்டுவருவதாகக் கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுகாதார மகளிர் விவகார அமைச்சின் உயர் அதிகாரிகள் இவ்விடயம்தொடர்பாக யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

# முஸ்லிம்கள் ஆணையுடன் தமிழ்க்குழுவுடன் பேசினோம்

## - முஸ்லிம் காங்கிரஸ்

[கொழும்பு]

''மூன்று லட்சம் முஸ்லிம் மக்களின் ஆணையைப் பெற்ற உரிமையுடன் நாங்கள் தனித்துவமான அந்த ஆணையை முன்வைத்தே நாங்கள் தமிழ்க்கட்சிகளுடன் பேசுகின்றோம்''

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. மேலும் அந்த அறிக்கையில்;

வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்களின் தனித்துவம், பாதுகாப்பு, அடிப்படை பிரதேசம் என்ற மூன்று அடிப்படையிலேயே இந்தப் பேச்சுக்கள் இடம் பெறுகின்றன என்றும்;

வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம் மக்களின் நலனில் அக்கறை உள்ளவர்கள் இந்த உறவை வலுப்படுத்தக் கூடிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ராஜீவ் கொலை வழக்கில் மோதிலால் ஆஜராகிறார்

(கொழும்பு)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சந்தேக நபர்களின் சார்பாக ஆஜராகி வாதாடவுள்ளதாக இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரும், பிரபல சட்டத்தரணியுமான மோதிலால்நேரு முன்வந்திருப்பதாக சண்டே ஐலண்ட் வெளியிட்ட கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவர் வெகு விரைவில் சென்னைக்குப் பயணமாகவுள்ளார்,

# விபத்துக்களில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வானத்தில் வட்டமிட்ட ''அவ்ரோ'' விமானத்தை அண்ணார்ந்து பார்த்த சிறுவன் ஒருவன் மினிபஸ் ஒன்றுடன் மோதி பலத்தகாயமடைந்திருக்கிறான்.

நேற்று சுன்னாகத்தில் நடைபெற்ற இச்சம்பவத்தில் ஜீவன் (வயது 8) என்பவரே பலத்த காயமடைந்திருக்கிறார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு கட்சிகள் கூட்டு

# ஜனாதிபதி வேட்பாளராக சிறிமாவை நிறுத்த முடிவு

(கொழும்பு)

ஆறு எதிர்க் கட்சிகள் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஆதரிப்பதென முடிவு செய்துள்ளன

இதனை அடுத்து யு. என். பி தமது கட்சியின் வேட்பாளரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையர் தேடப்படுகிறார்

(கொழும்பு)

லண்டனிலுள்ள வங்கி ஒன்றில் இடம்பெற்ற மோசடிச் சம்பவம் ஒன்று தொடர்பாக விசாரணைகளை நடத்திவரும் ஸ்கொட்லண்ட யாட் பொலிஸ் குழுவொன்று இலங்கைவந்துள்ளதாககொழும்பிலிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி வங்கியில் இடம்பெற்ற காசோலை மோசடியில் சம்பந்தப்பட்ட இலங்கையர் ஒருவரைத்தேடியே இக்குழு இலங்கை வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆஸ்பத்திரி ஊழியருக்கு நிவாரணப்படி இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கு கடந்த பதினெட்டு மாதங்களாகக்ஷ்ர நிவாரணப்படி வழங்கப்படவில்லை.

யாழ் மாவட்டத்தின் பெரும்பாலான அரசதிணைக்கள ஊழியர்களுக்கும் இந்நிதி வழங்கப்பட்டுள்ள போதிலும் யாழ். போதனா வைத்தியசாலை, யாழ் செயலக ஆட்பதிவு திணைக்களம் மற்றும் கைதடி சித்த ஆயுள்வேத ஊழியர்களுக்கே இதுவரை இக்ஷ - நிவாரணப்படி வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது யாழ் மாவட்டத்தில் அனைவருக்கும் வழங்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தப்பிஓடிய, காயமடைந்த படையினருக்காக புதிய நியமனம்

## 6000 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தினர், இராணுவத்திலிருந்து தப்பியோடி அல்லது காயமடைந்த 6,000 பேருக்கு பதிலாக புதிய நியமனங்கள் மேற்கொண்டு விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா இராணுவத்திலிருந்து 4000 க்கு மேற்பட்டோர் தப்பி ஓடிவிட்டதாகவும் 2000 பேர் அளவில் கடமையாற்ற முடியாதளவு படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயப்பட்டவர்கள் அல்லது தப்பியோடியவர்கள் கைவிட்ட ஆயுதங்களை வழங்கி மேலதிகச் செலவு எதுவும் இல்லாமலே காயப்பட்டவர்கள் அல்லது தப்பியோடியவர்களுக்குப் பதிலாகப் புதியவர்கள் இராணுவத்தில் சேர்க்கப்பட்டார்கள். புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களுக்கு மூன்றுமாதப் பயிற்சி வழங்கப்பட்டது.

தொடர்ந்தாற்போல் பல தடவைகள் இராணுவ நடவடிக்கைகளில் படைப் பிரிவுகள் ஈடுபடுத்தப்படுவதால் தற்கொலைகளும், தமக்குத் தாமே காயம் ஏற்படுத்துவதும் இராணுவத்தில் அதிகம் உள்ளன என்று இராணுவ தரப்பில் சொல்லப்படுகிறது.

நீண்ட காலமாக யுத்த முனையில் கடமையிலிருக்கும் பிரிவுகளுக்கு ஓய்வு கொடுக்கும் நோக்கத்துடன் இப்போது போர் முனைக்குப் படைப்பிரிவுகள் சுழற்சி முறையில் அனுப்பப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்

# இனப்பிரச்சினை அரசியல் தீர்வு நீண்டதொலைவு கனவாகும்

## அரசியல் அவதானிகள் கருத்து

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாச விற்கும், கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுக்கும் இடையேயான சந்திப்பின்பின்னர், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பது நீண்ட தொலைவிலுள்ள ஒரு கனவு என்றே அரசியல்அவதானிகள் பலரும் கருதுகின்றனர்.

இவ்வாறு கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது அப்பத்திரிகையில்மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

கடந்தவாரத்தில் சிறிலங்கா ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர் அவரின் கருத்துகள் வெறும் பிதற்றல் என கருத்து வெளியிட்டிருக்கும் தமிழ்க்கட்சிகள் ஐ.தே.க.விடமிருந்து இன பிரச்சினைக்கான தீர்வோ நிரந்தரமான

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**விற்பனையாகின்றன**

A/L வினாவிடை (உயர்கல் விப்பதிப்பகம் கொழும்புத் துறை) CR கொப்பிகள், 5ம் ஆண்டு கட்டுரைத்தேன்துளி 60, CHINA கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. மண்டேலா புத்தக சாலை யாழ்ப்பாணம். அரஸ் புத்தக நிலையம் யாழ்ப்பாணம். [2708]

**தவறிவிட்டது**

ப. பத்மகுமரன் (யோகாஸ், ஆடையகம், யாழ்ப்பாணம்) என்பவரது அடையாள அட்டை, கடைக்குரிய பற்றுச் சீட்டுகள் அடங்கிய கைப்பை ஒன்று கிளிநொச்சி கந்தசாமி கோயிலடியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கிளிநொச்சி சாந்தி ரெக்ஸ் கடையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (2709)

**பெற்றுக்கொள்ளவும்**

உடுப்பிட்டியைச் சேர்ந்த வீரவாகு துரைசிங்கம் (451350277V) அல்வாயைச் சேர்ந்த கதிரிப்பிள்ளை செல்லையா (132360057V) பருத்தித்துறையைச் சேர்ந்த புனிதவதி சதாசிவம் (4956-32571V) ஆகியோரது அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

# பிரேமதாசா - தமிழ்க்குழுக்கள் சந்திப்பில் நிகழ்ந்தவை

(கொழும்பு)

தேசிய இனப் பிரச்சினை தீர்வுக்குஇராணுவத்தீர்வுசாத்தியப்படாது என்றும் எதிர் வரும் ஜூலைக்கு முன்னர் அரசியல் தீர்வொன்று காணப்பட வேண்டியது அவசியம் என்றும் கடந்த பதினைந்தாம் திகதி யன்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துப் பேசிய தமிழ்க் குழுக்களின் சார்பில் ரெலோ இயக்கத்தின் பேச்சாளராகக் கலந்து கொண்ட முன்னாள் மூதூர் பாராளுமன்ற உறுப்பினர் அ. தங்கத்துரை கேட்டுக்கொண்டார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் தொடர்ந்தும் பங்குபெற சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணங்கியமைக்கு பாராட்டு தெரிவித்ததுடன் அமைச்சர் தொண்டமான் முன்வைத்த யோசனைகளுக்கு தமிழ்க் குழுக்களின் ஆதரவையும் வெளிப்படுத்தினார்.

இவற்றை ஆர்வத்துடன் செவிமடுக்காத நிலையிலிருந்த பிரேமதாசா, இவர்களின் கூற்றுக்களை தட்டிக்கழிப்பதற்கு சந்தர்ப்பம் பார்த்திருந்தவர் போல "இந்தச் சந்திப்பு ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் இதுவல்ல என்றும், அது தற்போது செல்லுபடியற்றதாகியுள்ளது" என்றும் பதிலளித்தார். அத்துடன் இவற்றைக் குறிப்பிடுவதற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழுதான் பொருத்தமான இடமென்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இக்குழுவில் கலந்துகொள்ள இருப்பதால் விரைவில் அதற்கான கூட்டம் கூட்டப்படும் என்றும், குறிப்பிட்டார். மேலும் தீர்வுத் திட்டம் பற்றிய விவாதங்களுக்கு இது ஒரு பொருத்தமான இடமல்லஎன்றும் தெரிவித்தார்.

மேலும் "வடக்கு கிழக்கு இணைப்பு பற்றிய கேள்வியை இங்கு எழுப்பியுள்ளீர்கள் இதற்கு ஐ தே. களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பதில் உண்டு. அது வடக்கு, கிழக்கு இணைப்பை எதிர்க்கிறது. எனினும் இது தொடர்பாக ஒரு கருத்தொருமைப்பாடு ஏற்படுமெனின் நாம் எதிர்க்கப் போவதில்லை" எனவும் குறிப்பிட்டார்.

"உங்களுக்குள் இன்னமும் கருத்து வேறுபாடுகள் இருப்பதாக நான் நினைக்கின்றேன் சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் ஏற்புடையதான விடயங்களை ஏற்றுக் கொண்டால் பிரச்சினையை நாம் தீர்த்து விடமுடியும்" என்றும் பிரேமதாசா கூறியுள்ளார்.

இதனைக் கேட்ட தமிழ்க் குழுக்கள் அதிர்ச்சியுடன் மௌனமாகின. தொண்டமானும் அமைதியாகவே உட்கார்ந்திருந்தார்.

தமிழ்க் காங்கிரஸ் சார்பில் கலந்து கொண்ட விநாயகமூர்த்தியும், புளொட் சார்பில் கலந்து கொண்ட கரவை கந்தசாமியும், நாங்கள் ஐக்கியமாகத்தான் செயற்படுகின்றோம் எனக் கூறினர் முஸ்லிம்களுடனும் பேச்சு வார்த்தை நடப்பதாக தெரிவித்தனர்.

இந்நிலையில் அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கவிடம் பிரேமதாசா பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் ஐ.தே.க. உறுப்பினர்கள் பங்கு பெறுவதை உறுதிப்படுத்தும்படியும், தெரிவுக் குழுவின் நடவடிக்கைக்கு ஐ.தே.க உதவ வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இறுதிக்கட்டத்தில் புனர்வாழ்வு பற்றி மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் பராஜசிங்கம் பேச முற்பட்ட போது சம்பந்தப்பட்ட அமைச்சர் இல்லாத நிலையில் அது பற்றிப்பேச பிரேமதாசா மறுத்துவிட்டார்.

## கருத்தரங்கும் பயிற்சியும்

[யாழ்ப்பாணம்]

இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தினரால் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (28-6-92) மாலை 3 30 மணியளவில் மௌளிவாதமும், இந்நோயைக் குணப்படுத்தும் யோக சிகிச்சை முறைகள் பற்றிய கருத்தரங்கும் இந்நோய் தொடர்பான யோகாசன செய்முறைப் பயிற்சியும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

யோகாசனக் கலாநிதியும், அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தின் இயக்குனருமான சுவாமி ஸ்ரீ சிதானந்த யோகி அவர்களும் யோகாசன நிபுணர்களும் இக்கருத்தரங்கில் பங்குபற்றி கருத்துரைகள் வழங்கியும் யோகாசன செய்முறைப் பயிற்சியும் செய்து காண்பிக்க உள்ளனர்.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரத்தாய் மடியில்: 06 - 02 - 1966

தமிழ்த்தாய்மடியில்: 26 - 06 - 1989

திதி: 23 - 06 - 1992

**லெப். நித்திலா (பவானி நல்லையா)**

இன்று 23 ஆம் திகதி வீட்டில் நடைபெறும் வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் அழைக்கின்றோம்.

கொம்மாந்துறை, வல்வெட்டித்துறை. (2701) - குடும்பத்தினர்

# "பழங்கால கலை மரபுகளை பேணிப்பாதுகாக்கவேண்டும்"

- தமிழ்மாறன்

[மன்னார்]

"பழங்கால நாட்டுக்கூத்துக்களை இக்காலத்தில் மேடையேற்றுவது என்பது கலைகளை மெருகூட்டுவதும், பழங்கால கலைகளுக்குப் புத்துயிர் ஊட்டிப் பேணிப் பாதுகாப்பதும் போன்ற செயல்களினாலாகும்" என்று மன்னார்மாவட்ட துணை அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் செ. தமிழ் மாறன் தெரிவித்துள்ளார்.

சென்ற 19ஆம் திகதி மாதா கிராமம் பெரிய குஞ்சுக்குளத்தில் இடம்பெற்ற "புனித சந்தோமையார் நாட்டுக் கூத்து" அரங்கேற்றம் செய்யப்பட்டது. அவ்விழாவில் கலந்துகொண்டு பேசுகையிலேயே தமிழ்மாறன் இவ்வாறு தெரிவித்தார்.

நாம் சமகால நிகழ்வுகளையே எண்ணிப் பார்க்கின்றோம். இவற்றுக்கே முக்கியத்துவம் அளிக்கின்றோம். எனவே இக்காலத்திலும் எக்காலத்திலும் எமது மூதாதையர் கட்டி வளர்த்த கலைகளுக்கு முக்கியத்துவம் அளித்து வளர்க்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மன்னாரின் எல்லைப்புறக் கிராமமான குஞ்சுக்குளத்தில் பத்து வருடங்களுக்குப் பின்னர் இம்முறையே இந்த நாட்டுக் கூத்து அரங்கேற்றம் செய்யப்பட்டது குறிப்பிடத் தக்கது.

இவ்விழாவிற்கு மடுப்பங்குத்தந்தை அருட்திரு எஸ் கே. தேவராஜா அடிகள், மடுப் பிரதேச அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளையவன், குஞ்சுக்குள கிராமியப் பொறுப்பாளர் சசி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நினைவு கூருகின்றோம்... 1992-06-23

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

★ சின்னவி (அன்ரனி எலியசஸ் - வண்ணாங்குளம், முல்லைத்தீவு.)

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாமாங்கம் பகுதியில் தேசவிரோத சக்திகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

ஈஸ்வரன் [மாமாங்கம், மட்டக்களப்பு.]

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு கும்புறுமூலைப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட எறிகணை வெடிவிபத்தில் எம்மைப் பிரிந்த

லீனஸ் [செல்லையா பத்மநாதன் - கிரான், மட்டக்களப்பு.]

மட்டக்களப்பு உன்னிச்சைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

சீனு [கிருபைராஜ் சுஜதாஸ் - பெரிய கல்லாறு, மட்டக்களப்பு.]

அலோசியஸ் [புவிராஜசிங்கம் -கோட்டைக்கல்லாறு மட்டக்களப்பு.]

நகுலேஸ் [கணபதிப்பிள்ளை சோமேஸ்வரன் - களுவாஞ்சிக்குடி... கரடியனாறு, மட்டக்களப்பு.]

வேட்டோ | சின்னவன் (சுப்பிரமணியம் விஜயகுமார் - மண்டூர், மட்டக்களப்பு.)

மணலாறு செம்மலைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

கப்டன் அகஸ்ரின் [சிங்கராசாசேகர் - பனங்கட்டிக்கொட்டு, மன்னார்.]

பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

சுந்தரம் [நியூட்டன்பெரேரா - எட்டாம் வட்டாரம், பேசாலை, மன்னார்.]

2 ம் லெப். ரெனோ (விநாயகமூர்த்தி திவாகரன்-

## மனித உரிமைகளைஏற்க இலங்கையைவற்புறுத்தவும்

### -தொ.சங்க சம்மேளனம் கோரிக்கை

அடிப்படை மனித உரிமைகளை ஏற்று நடக்க இலங்கை அரசை வற்புறுத்த வேண்டுமென சுவிற்சலந்திலுள்ள சர்வதேச தொழில் ஸ்தாபனத்திடம் இலங்கை தொழிற் சங்கங்களின் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது

இது தொடர்பாக இலங்கை தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் டி. டபிள்யூ சுபசிங்கா சர்வதேச தொழில் அமைப்பின் செயலாளர் நாயகத்திற்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்

இதற்கு முன்னர் 1987ஆம் 1989ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் கூட்டத் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கான உரிமையை இலங்கை அரசாங்கம் மறுத்து வருவதனை சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் உறுப்பு நாடுகளின் கவனத்துக்கு கொண்டு வருமாறு அந்த மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

1989 ஆம் ஆண்டிலிருந்து பெரும்பாலான அரசாங்க சேவைகளும் 75 சதவீதத்திற்கு மேற்பட்ட கைத்தொழில் விவசாய முயற்சிகளும் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி அவசரகாலச் சட்டத்தின் கீழ் தொழிற் சங்க நடவடிக்கைகள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளன

## இந்துக்கள் நிலைபற்றி

## இந்துசமயப் பேரவை அத்வானிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள இந்துக்களின் நிலைபற்றி யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை இந்திய எதிர்க்கட்சித் தலை... களிலிருந்து விக்கிரகங்கள் அகற்றப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வரலாற்று பெருமைமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் திருக்கோணேஸ்வரர்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி

ஐந்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமும் ஆண்டு 9 (தரம் 8) கல்வித் தகைமையும் கொண்ட அரசாங்க / அரசகூட்டுத்தாபன / தனியார் நிறுவனங்களில் அல்லது சுய தொழிலில் (விவசாயம், மீன்பிடி, மற்றும் குடிசைக் கைத்தொழில் உட்பட) ஈடு...

றும் குடிசைக் கைத் தொழில் உட்பட) ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கான தொழிலாளர் கல்விப் பாடநெறிக்கு அனுமதி பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவத்தையும்மேலதிக விபரங்களையும்பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் ரூபா 15/-இனை செலுத்திப்பற்றுச்சீட்டினை சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது / சுய விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ.மீ X 10 செ.மீ அளவினதான கடித மேலுறையுடன் உதவிப் பதிவாளர் தேர்வுகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிப் பெற்றுக் கொளளலாம். விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி 31.07.1992.

பாடநெறியிற் பங்குபற்றுவோர் எழுத்துத்தேர்வு ஒன்றுச்கூடாகவும் நேர்முகத்தேர்வு ஒன்றுக்கூடாகவும் தெரிவுசெய்யப்படுவர்.

எழுத்துத் தேர்வு 20-09-1992 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

குறிப்பு:-

பத்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவம் உடையவர்களிடமிருந்து ஆண்டு 9 இலும் குறைவான கல்வித் தகைமையுடனும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதிவாளர்

(சி/4586)

---

இந்திய எதிர்க்கட்சித் தலைவர் எல். கே. அத்வானிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இக்கடிதத்தில் 1983 இல் இனப்பிரச்சினை தொடங்கிய நாள்தொடக்கம் இந்துக்கோயில்கள் சேதப்படுத்தப்பட்டு வருவது குறித்தும் மாசு படுத்தப்பட்டு வருவது குறித்தும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இதுவரை வடக்கு கிழக்குப் பகுதியில் சுமார் 700 இந்துக் கோயில்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் 63 கோயில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், திருக்கோணேஸ்வரர் ஆலயம், கீரிமலை நகுலேஸ்வரம், உகந்தை முருகன் கோயில் என்பவற்றின் தற்போதைய நிலைகுறித்து எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

வற்றாப்பளை அம்மன் ஆலய எறிகணைவீச்சு, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் விமானக் குண்டு வீச்சினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் என்பனவும் அதில் எடுத்து விளக்கப்பட்டுள்ளது.

## கடும் காற்றினால்

# மலையகப் பகுதி மக்கள் இடம் பெயர்ந்தனர்

[மாத்தளை]

மலையகப் பகுதியில் தற்போது வீசிவரும் கடும் காற்றினால் மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த முந்நூறுக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு அகதிகளாக அயலவர்களின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

கந்தரபொல, கும்புற, உக்குவளை, இரத்தோட்டை ஆகிய பகுதிகளே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், எல்கடுவ, ஹங்கரங்கந்த தோட்டத்தைச் சேர்ந்த இரண்டாம் இலக்க லயக் காம்பராக்களின் கூரைகள் அனைத்தும் காற்றினால் அடித்துச் செல்லப்பட்டதாகவும், இதனால் இங்குள்ள பத்துக் காம்பராக்களில் குடியிருந்த ஒன்பது குடும்பங்களைச் சேர்ந்த 41 பேர் குணுகல அரச தோட்டப் பாடசாலையில் தஞ்சமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமலையில் கரை ஒதுங்கிய 40அடி கடல் வாழ் உயிரினம்

(திருக்கோணமலை)

நாற்பது அடி நீளமான இராட்சத கடல் உயிரினம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை காலை திருக்கோணமலை மட்கோ இறக்குதுறை ஓரமாக உயிருடன் கரையொதுங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

மீனின் உருவத்தைஒத்திருந்த இந்த கடல் வாழ் உயிரினத்தை மீன் பிடி அமைச்சு அதிகாரிகள் இழுவைக் கப்பல் மூலம் இழுத்துச் சென்று நடுக்கடலில் விட்ட போதிலும் அது மீண்டும் கரைக்கு வந்து சேர்ந்தது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

'ஓங்கில்' எனப்படும் கடல் வாழ் விலங்கினமே இது எனக் கடற்றொழில் மேற்கொள்ளும் சிலர் தெரிவித்தனர்.

நடுக்கடலில் கப்பல்களினால் தாக்கப்பட்டோஅல்லது தற்போது வீசுகின்ற காற்றுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமலோ இந்த உயிரினம் கரைக்கு ஒதுங்கியிருக்கிறது என்றும் மீன் பிடி அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

பெற்ற சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் கூட்டத் தொடர்களில்எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தும் கூட ...த்தின் கீழ் தொழிற் சங்க நடவடிக்கைகள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளன எனவும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேவைக்கால கொடுப்பனவு

# சம்பந்தமான தீர்மானங்கள் தொழிலாளருக்கு பாதகமே

[ஹற்றன்]

தனியாருக்குத் தோட்டங்களைக் கையளிக்க இருப்பதால் இம்மாதம் வரை அவர்கள் ஆற்றிய சேவைக்கான சேவைக்காலப் பணத்தைக் கணக்கிட்டு வைத்து விட்டு தனியாருக்கு கையளித்த பின்னரான சேவைக் காலப் பணத்தையும் தனியாகக் கணக்கிட்டு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதானது தொழிலாளர்களின் நிரந்தர உரிமையில் கைவைக்கும் செயலாம்.

இவ்வாறு பொகவந்தலாவ லங்காதி தோட்டத் தொழிலாளர் யூனியன் பணிமனையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி யூனியன் அமைப்புச் செயலாளர் எஸ். யூ. எஸ். ஹமீட் தெரிவித்தார்.

## மாவீரர்களின் கனவுகள்

# நாளைய சந்ததியின் சுதந்திரமும்சுபீட்சமும் தான்

(வடமராட்சி)

**- பைந்தமிழன்**

மறைந்த மாவீரர்கள் தங்கள் எண்ணங்களை விரிவுபடுத்தி விடுதலைத்தீயை நெஞ்சில் ஏற்றி வீரம் செறிந்த ஒரு வரலாற்றைப் பதித்துவிட்டு வீழ்ந்து வித்தாகியுள்ளனர்.

இவ்வாறு புலோலி மத்திப் பகுதியில் நேற்று இரவு நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் பருத்தித்துறை வட்ட அவைப் பொறுப்பாளர் திரு. பைந்தமிழன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் மாவீரர்கள் விழும்போது அவர்களுடைய கனவுகள் நாளைய சந்ததியின் சுதந்திரத்தையும் சுபீட்சத்தையும் வேண்டி நிற்கின்றது, அந்த சமுதாயம் சாதி, சமயம் வர்க்க பெண் அடிமைத்தனமற்ற ஒரு புதிய யுகமாக பரிமாணம் கூரவேண்டுமென்பது அவர்களுடைய எண்ணக்கரு. அதை மனதில் ஏற்று அடைவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ளவேண்டும்.

இன்று தமிழீழத்தை முற்று முழுதாக அழிப்பதற்காக சிங்கள பேரினவாதம் திட்டமிட்ட ரீதியில் போரைக்கட்டவிழ்த்து விட்டிருக்கிறது இதற்கு முகம் கொடுக்க வேண்டிய எதிரியை இந்த மண்ணிலிருந்து துரத்த வேண்டியபாரிய பொறுப்பு தமிழினத்திற்கு வரலாற்று கடமையாக அளிக்கப்பட்டிருந்தது அதை எதிர்கொள்ளவேண்டிய மனோவலிமையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

எங்களைமட்டும்மீட்கப்பாடுபடுவது போராட்டத்தின் முழு வடிவம் அல்ல. மக்கள் மத்தியில் தொல்லைகள் குவிந்துள்ள சமூக சீர்கேடுகள் களைக்கப்பட்ட புதிய சமுதாயத்தை தோற்றி வைப்பதும் இப்போராட்டத்தின் நோக்கமாகும் என்றார். (82)

---

சுந்தரம் [நியூட்டன்பெரேரா - எட்டாம் வட்டாரம், பேசாலை, மன்னார்.]

2ம் லெப். ரெனோ (விநாயகமூர்த்தி திவாகரன்- மறவன்புலவு, சாவகச்சேரி.)

இதே பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எம்மைப் பிரிந்த -

லாலா [கறுப்பன் தவச்சந்திரன் - முழங்காவில், மன்னார்]

கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

ரஞ்சித் (சின்னச்சாமி இராசு - மாயனூர், வட்டக்கச்சி, கிளிநொச்சி.)

நவசீலன் (முரசுமோட்டை, பரந்தன், கிளிநொச்சி.)

சுந்தரராசா

அம்பாறை அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்காப் படையினரால் ரயர் போட்டு எரிக்கப்பட்டுக், கொல்லப்பட்ட பொத்துவில் / ஏத்தம், றொட்டைப் பகுதிகளைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

மட்டக்களப்பு பெரியபோரதீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர், எல்லை நகர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட தமிழ்த் தொழிலாளி.

திருக்கோணமலை நிலாவெளிப் பகுதியில் இடம்பெயர்ந்தோர் முகாம் மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 30 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு திருக்கோணமலை தம்பலகமம் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

சுரேஷ் [பாலசுப்பிரமணியம் ஞானசீலன் - 21/3, வித்தியாலய வீதி, காளிகோயிலடி, திருக்கோணமலை.]

லோஜன் [ஞானப்பிரகாசம் லோறன்ஸ் - 6 ஆம் வட்டாரம், கண்டி வீதி, கப்பல்துறை, திருக்கோணமலை.]

கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். ரவிராஜ் (சின்னராசா தவராசா - கும்பளாவளை, அளவெட்டி.)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட வேப்பவெட்டுவானைச் சேர்ந்த கூலி விவசாயியான தமிழ் இளைஞன்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4584)

# அணுகுண்டு தயாரிக்கும் உரிமையை தடுக்கும் அதிகாரம் எவருக்கும் கிடையாது

நேற்றைய தொடர்ச்சி -

கேள்வி:-

ஐரோப்பாவில் நடக்கவிருக்கும் தேர்தல்களைப் பற்றியும் தற்போது நடந்துகொண்டிருக்கும் தேர்தல்களைப் பற்றியும் உங்கள் கருத்து என்ன ?

பதில்:-

ஐரோப்பாவில் வலது சாரிகள் வெற்றிபெற வேண்டும் என்ற எனது முழுமையான விருப்பத்தை நான் உங்களிடம் மறைக்க விரும்பவில்லை. நான் பொதுவுடமை வாதிகளுடன் உறவாடிச் சலித்துப் போய்விட்டேன்.

கேள்வி:-

அடிப்படை வாதிகளின் மத வெறிக் கொள்கை, அவர்களின் செல்வாக்கை அதிகரிக்க செய்யும் என நம்புகிறீர்களா?

பதில்:-

அராபிய உலகத்தில் மேற்குலக நாடுகள் செய்துவரும் கொடூரச் செயல்கள் புதியன வல்ல. தங்கள் மரபுவழி வழிமுறைகளுக்கும், வாழ்க்கை முறைகளுக்கும், பண்பாட்டிற்கும் மதிப்புக்கொடுக்காமல் மேற்குலக நாடுகள் நெடுங்காலமாக நடந்துவந்துள்ளன என்பதை முஸ்லிம் அடிப்படைவாதிகள் நெடுங்காலமாக அறிந்துவந்துள்ளனர். அராபிய நாகரிகத்துக்குமேற்குலக நாடுகள் மதிப்புக் கொடுப்பதில்லை. அத்துடன் அவர்களுடைய புனிதத்தலங்களுக்கும் மதிப்புக்கொடுப்பதில்லை. தொடர்ச்சியாகச் செய்யப்பட்ட இந்த முறைகேடான செயல்கள் பாரிய எதிர்ப் புணர்ச்சியை உருவாக்கியது.

கேள்வி:-

இந்த விடயத்தில் உங்கள் கருத்தென்ன?

பதில்:-

அடிப்படைவாதத் தலைவர்களுடன் நான் பேச்சுவார்த்தை நடத்தியபோது, அவர்கள் வெகு விரைவாக ஒரு புனிதப் போரைத் தொடங்குவதற்கு ஆதரவு நல்கும்படி என்னைக் கோரினர். அவர்களுக்கு ஒரு கலிபா (Caliph) தேவைப்பட்டார். (கலிபா என்பது நபிகள் நாயகத்தின் அடுத்த வாரிசு என்றும் முஸ்லிம் சமூகத்தின் தலைவர் என்றும் பெருள்படும்) அவர்களின் கோரிக்கைகளை நான் ஏற்றுக்கொண்டால் முழு உலகமுமே கொழுந்து விட்டெரி-ளுக்கு அளித்த விடை ஏற்புடையதாக இருக்கவில்லை. இதற்கு மேலும் செல்ல அவர்கள் விரும்பினர். அவர்களின் வேட்கைகளை கட்டுப்படுத்த ஒருவராலும் முடியாவிட்டால் அவர்கள் மாகடல்களையும் கடக்க எத்தனிப்பர். லிபியாவைக் கலிபாவின் தாய்நாடாக இருக்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்தினர். அடுத்தபடியாக அந்தக் கலிபா நபிகள் நாயகத்தின் அடுத்த வாரிசாக இருக்கத் தகுதியானவன் எனவும் கூறினர். தெற்கு ஐரோப்பா, சிசிலி, ஸ்பெயின் பல்கேரியாவின் சில பகுதிகள் இஸ்லாமிய அரசின் எல்லைகளாக இருக்க வேண்டுமென்றும் விரும்பினர் ஒட்டாமன் நாடுகளும் (Ottoman States) அண்டாலூசியன் (Andaluhan) அரசுக்கும் முன்பு சொந்தமாக இருந்த நாடுகளை மீளப்பெற வேண்டுமென்றும் விரும்பினர். இத்தாலியையோ, ஸ்பெயினையோ பிரிப்பதென்பது நினைத்துப்பார்க்கக் கூடியதொன்றல்ல என்பதே எனது நம்பிக்கையாகும். இப்படியான செயல் ஐரோப்பிய நாடுகளில் குடியேற்றுவதற்கு ஒப்பாகும். எங்களுக்கு எங்கள் எல்லைகளை நன்றாகத் தெரியும். வட ஆபிரிக்கா, அதை நாம் பாதுகாக்க வேண்டும். ஆனால் அதற்கு அடிப்படை வாதிகள் ஒத்துவருகிறார்களில்லை. வட ஆபிரிக்காவின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தவேண்டுமாயின் அவர்களைப்போல் எண்ண வேண்டுமென அவர்கள் நினைக்கின்றனர். கனாறி (Canary) தீவுகளை ஸ்பெயின்கைப்பற்றி வைத்திருப்பதாக அவர்கள் நினைகின்றனர். அந்தத் தீவுகளைத் திரும்பப் பெறவேண்டுமெனவும் விரும்புகின்றனர். இப்படிப்பட்ட கருத்துக்கள் அளவுக்கு மீறிய தேசியவாதமாகும்.

அதுமாத்திரமல்ல. அல்ஜீரியாவில் ஒரு முஸ்லிம்நாடு தோன்றவேண்டுமென அடிப்படைவாதிகள் விரும்புகின்றனர். ஆனால் லிபியாவில் அடிப்படைவாத இஸ்லாம் முன்னணி என்ற இயக்கம் இடையாது. தங்கள் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்ல லிபியாவை ஒரு இணைப்புப்பாலமாக அவர்கள் நினைக்கின்றார்கள் இது ஒரு புரட்சிவாத உண்மை-ளுக்கு லிபியா ஏற்ற நாடு என நினைக்கின்றனர். அடிப்படைவாதிகள் தங்கள் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதைத் தடுப்பதற்கு என்னால் முடிந்தவரையும் ஏற்ற வழிகளைச் செய்து வருகின்றேன்.

கேள்வி:

அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பயங்கரவாதத்தைப் பயன்படுத்துவது முறையாகுமா?

பதில்:

அரசியல் பிரச்சினைகள் தான் பயங்கரவாதத்துக்குக் காரணமாகும். பயங்கரவாதத்தை ஒருவர் முடிவுக்குக் கொண்டுவரவிரும்பினால் அரசியல் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும். பலஸ்தீனியப் பிரச்சினை சிறுபான்மையினர் பிரச்சினை, தென்னாபிரிக்கப் பிரச்சினை என்பன தீர்க்கப்பட்டால் பயங்கரவாதம் முடிவு பெறுவதை ஒருவர் காணமுடியும். ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவது என்பது முடியாத காரியமாகும்,

கேள்வி:

உங்களுடைய பகுப்பாய்வுகளை மேற்குநாடுகள் ஒத்துக் கொள்ளுமா? அவைகளை அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா?

பதில்:

காலம் எனது பக்கத்திலிருக்கின்றது. நான் ஒரு நாட்டின் தலைவனல்ல. நான் படிக்கின்றேன். சமூக அறிவியல் கழகத்தில் நான் ஒரு உறுப்பினன். என்னுடைய கருத்துக்களைப்பற்றி சொற்பொழிவாற்ற என்னை அழைத்தால் நான் எங்கும் வரத்தயாராயுள்ளேன்.

கேள்வி:

ஐக்கிய அமெரிக்காவுக்குப் போகவும் தயாரா?

பதில்:

ரம்ழான் நோன்பு முடிந்தவுடன் உலகத்திலுள்ள எந்த நாட்டிற்கும் போக நான் தயாராயுள்ளேன். ஐக்கிய அமெரிக்காவுக்குப் போவதை நான் பெரிதும் விரும்புகின்றேன். என்னை அழைக்கும் எந்த அமெரிக்கப் பல்கலைக்கழகத்துக்கும் செல்ல நான் தயாராயுள்ளேன்.

பதில்:

அப்படியானால் தான் அவர்கள் விளங்கிக் கொள்வார்கள். அமெரிக்கா பல தவறுகளைச் செய்து வருகின்றதென்பதை அவர்களுக்கு எடுத்துக்காட்டுவதற்காக, இத்தவறுகளை நடைபெற அமெரிக்க அரசாங்கம் இடமளிக்கின்றது. துரதிஷ்டவசமாக நான் அமெரிக்கா வருவதைத் தடை செய்வதற்காக எனது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது என அமெரிக்க அரசாங்கம் சில சாக்குப்போக்குகளைக் கூறும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அது முக்கியமானதும், அவசியமானதுமாகும். எங்கள் உலகம் மற்ற உலகத்துக்குத் தனது கொள்கைகளைத் திடமாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறத்தக்கதாயிருக்க வேண்டும். நாங்கள் எங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும்.

கேள்வி:

உலக அபிப்பிராயப்படி தேர்தல் முறைகளில் உங்களுக்கு நம்பிக்கையுண்டா?

பதில்:

எல்லோரும் பங்கு கொள்ளக் கூடிய நேரடி சனநாயக முறையை நான் விரும்புகின்றேன். பாராளுமன்றம் என்பது நகைப்புக்கிடமானது நான் எழுதிய சிறிய பச்சைப் புத்தகத்திலுள்ள கருத்துக்களை உலகம் ஒரு நாள் விளங்கிக் கொள்ளுமென நான் நம்புகின்றேன்.

மக்கள் தங்கள் தங்கள்கருத்துக்களை ஒழிவு மறைவின்றி எடுத்துக் கூற வழிசெய்வது முக்கியமானதாகும். சிறு சிறு பிரசைகள் குழுக்கள் ஒன்று சேர்ந்து தங்கள் வேட்கைகளை தங்களை அரசாட்சி செய்பவர்களுக்குக் கேட்கத்தக்கதாகச் செய்யும் மக்கள் சபை என்றகருத்தில் நான் நம்பிக்கைகொண்டவன் இப்படியானமுறையில் சர்வாதிகாரம் ஏற்படவழியிராதாகையால் மக்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்வார்கள்.

கேள்வி:

ஒரு காலகட்டத்தில் உங்கள் வைவசம் அணுகுண்டு இருக்குமென நீங்கள் நம்புகிறீர்களா?

பதில்:

நான் உயிரோடிருக்கும்வரை

கேள்வி:

பான் - அமெரிக்க விமான விவகாரம் பற்றிப்பேசுவோம். உங்கள் சொந்த விசாரணைகளில் எந்நிலையில் இருக்கின்றீர்கள்? மேற்குலக நாடுகளுக்குத் தெரியாத விடயங்கள் இத்துன்ப நிகழ்ச்சியில் இருக்கின்றனவா? வெளியிடுவதற்கு ஏதேனும் தகவல்கள் உங்களிடம் உண்டா?

பதில்:

நான் இப்போது உங்களுக்கு கூறவிரும்புவதை இதுவரை வேறொருவருக்கும் கூறவில்லை. மத்திய புலனாய்வுத் துறையிலிருந்து இளைப்பாறிய முன்னாள் மேலாளர்களை பான் - அமெரிக்க நிறுவனம் இந்த குண்டு விபத்துப்பற்றி விசாரிக்கும் பணியில் அமர்த்தியுள்ளது. இந்த விசாரணை அறிக்கையை நாம் பெற்றிருக்கின்றோம். இந்த அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கான பணம் அந்த ஒட்டாண்டி நிறுவனத்திடம் இல்லை. திரு. புஷ் அவர்கள் மீது எனக்கு நல்ல நம்பிக்கையுண்டு. இந்த அறிக்கை கிடைத்தவுடன் அவருக்கு அதை அனுப்பிவைத்தேன். அவர் அதற்குப் பதில் அனுப்பவில்லை. தனது தேர்தல் கோட்பரப்புரையில் ஈடுபட்டுவருவதனால் அவருக்கு நேரம் இல்லாதிருக்கலாம். லிபியாதான் இந்த விபத்துக்குக்காரணம் என அவருக்கு நெருங்கியவர்கள் கூறுவதையிட்டு அவர் ஆச்சரியமடைந்துள்ளதாக அறிந்தேன். இந்த வெடிகுண்டு வைத்த சூத்திரதாரி யார் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் எங்கள் நாடு இந்த விபத்துக்குப் பொறுப்பில்லை. இந்த அறிக்கை இருப்பதாகவோ அல்லது இதிலுள்ள விடயங்களோ பாதுகாப்புச் சபை உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லை. இந்த அறிக்கையிலுள்ள விடயங்கள் மூடி மறைக்க முடியாதவை. இந்த விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு லிபியா பலிக்கடாவாக காட்டப்படுகின்றது. ஆனால் அந்தக் குடும்பங்கள் உண்மையை அறிய விரும்புகின்றன.

கேள்வி:

விபத்துக்குள்ளானவர்களின் குடும்பங்கள் இந்த அறிக்கையைப் பார்வையிட முடியுமா?

பதில்:

---

## சிந்தனைக்கு

தாங்களே தற்காத்துக் கொள்ளும் இதயம்
எங்களுடையதாய் இருக்கட்டும்
— வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

61, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 23-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 35

## கல்வியில் தொடரும் ஒடுக்கு முறை

"1990 ஆகஸ்ட்டில் நடத்தப்பட்ட ஜீ. சி. ஈ உயர்தரப் பரீட்சையும், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நடத்தப்பட்ட ஜி. சி. ஈ. உயர்தர விசேட பரீட்சையும், பல்கலைக்கழக அனுமதி விடயத்தில் வெவ்வேறானவையாகக் கருதப்படும்" இவ்வாறு நீதி அமைச்சரும், உயர்கல்வி அமைச்சருமான ஏ. சி. எஸ். ஹமீத் கடந்த வெள்ளியன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் பரீட்சை வினாக்கள் போன்றே ஒரே மாதிரியான எல்லா வகைகளிலும் ஒத்த வினாக்களே 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் பரீட்சைக்கும் வழங்கப்பட்டிருந்ததாக மக்கள் ஐக்கிய முன்னணி எம். பி. தினேஷ் குணவர்த்தனா குற்றம் சாட்டியிருந்தார். இதனைத் தொடர்ந்தே உயர்கல்வி அமைச்சு இவ்வாறானதொரு முடிவை எடுத்துள்ளது.

சிறிலங்கா அரசாங்கத்தின் இம்முடிவினால், திறமையின் அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையில் ஒரு பெரும் வெட்டை (ஏறத்தாழ 50 வீதம்) ஏற்படுத்துவதற்கு வாய்ப்புண்டாகிறது. சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிட்ட இச்செயலானது தரப்படுத்தலுக்குப் புதியதொரு வடிவத்தைக் கொடுத்துள்ளது.

இரண்டு பரீட்சை வினாத்தாள்களும் அடிப்படையில் ஒரே வகையாக இருந்தமையால் தான் இப்பரீட்சைகளைத் தனித்தனியானவைகளாகக் கருத முடிவெடுக்கப்பட்டுள்ளதாகத் திரு. ஏ. சி. எஸ் ஹமீத் தெரிவித்துள்ளமை ஒரு ஏமாற்றுத்தனமானதாகும். உயர்கல்வி அமைச்சராக மட்டுமல்லாமல் ஓர் நீதி அமைச்சராகவும் இருக்கும் திரு ஏ. சி எஸ். ஹமீத் இவ்வாறு கூறியுள்ளமை நீதித்துறைக்கும் அவமானகரமானதும், வெட்கக் கேடானதும் ஆகும்.

பொதுவாகப் பரீட்சை வினாத்தாள்கள் பாடத்திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படினும் பாடத் திட்டத்தில் உள்ள சில விசேட பகுதிகளில் இருந்தே வருடா வருடம் பெரும்பாலான வினாக்கள் தெரிவு செய்யப்படுவது வழமையாகும் அத்தோடுகடந்த கால வினாத்தாள்கள் புதிய வினாத்தாள்கள் தயாரிப்பவர்களின் அடிப்படையாக அமைவதும் உண்டுசில காலங்களில் அடுத்தடுத்த வருட வினாத்தாள்களில் ஒரே மாதிரியான கேள்விகள் அதே வடிவத்தில் வெளிவந்ததும் உண்டு. இதற்கும் மேலாக இப்பரீட்சைவினாத்தாள்கள் அனேகமாக சிங்களவர்களாலேயே தயாரிக்கப்படுகின்றன. அதிலும் குறிப்பாகச் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டே தமிழில் மொழி

வடிவத்தில் வெளிவந்ததும் உண்டு. இதற்கும் மேலாக இப்பரீட்சைவினாத்தாள்கள் அனேகமாக சிங்களவர்களாலேயே தயாரிக்கப்படுகின்றன. அதிலும் குறிப்பாகச் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டே தமிழில் மொழி பெயர்ப்பும் செய்யப்படுகின்றன.

இவை ஒரு புறமிருக்க, இப்பரீட்சையை வடக்கு-கிழக்கு தமிழ் மாணவர்கள் எவ்வளவு நெருக்கடியிலும், துன்பத்தின் மத்தியிலும் எழுதினார்கள் என்பதை நீதி அமைச்சரும், உயர்கல்வி அமைச்சருமான ஹமீத் ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. முற்று முழுதான பொருளாதாரத்தடை அமுலில் இருந்த வேளையிலும் மின்சாரவெட்டு எரிபொருள்தடை என்பனவற்றால் இரவு நேரம் ஒரு வீட்டில் ஒரு விளக்கு தானும் எரிக்க முடியாத நிலையிலும், ஒருபுறத்தில் ஊரடங்குச்சட்டமும், போரும் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், பரீட்சைக்கு சென்ற மாணவர் கைது தொடர்ந்து கொண்டிருக்கையில். பரீட்சை தொடர்ந்து நடக்குமா? இடையில் நிறுத்தப்படுமா? என்ற அவல நிலையில் இப்பரீட்சை நடந்தது. அதாவது பரீட்சை நடைபெறுவதற்கான எந்தவித சாதகமற்ற நிலையிலும், பரீட்சை நடந்தமை உயர்கல்வி அமைச்சருக்குத் தெரியாத தொன்றல்ல.

இந்நிலையில், ஒரே அடிப்படையில் வினாத்தாள்கள் வெளிவந்தன எனக் காரணம் கூறித் தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியில் வெட்டை ஏற்படுத்துவது இன ஒடுக்குமுறையின் ஒரு தொடர் நடவடிக்கையே என்பதில் சந்தேகம் கொள்ள எதுவுமில்லை. இது ஒரு நீதிக்கு அப்பாற்பட்ட நடவடிக்கை ஆகும். அமைச்சர் குறிப்பிட்டது போன்று வினாத்தாள்கள் ஒரே மாதிரியாக வெளிவந்தன என்றாலும் அதற்குப் பொறுப்பு பரீட்சை திணைக்களமே ஒழிய பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் பரீட்சை எழுதிய தமிழ் மாணவர்கள் அல்ல.

இதேவேளை, பல்கலைக்கழக அனுமதியில் இருந்து இனப்பிரச்சினையின் ஏனைய முனைப்பான பிரச்சினைகள் வரை இவ்வளவு நெருக்கடியின் பின்பும் சிங்கள அரசாங்கம் தனது கொள்கையில் மாற்றம் எதையும் கொண்டுவரவில்லை தமிழரின் தேசிய இனப் போராட்டம் தாயகத்தின் பாதுகாப்பு, மொழி உரிமை, இன அழிப்பு என்பனவற்றின் அடிப்படையில் உருப்பெற்றாலும் எழுபதுகளில் சிங்கள அரசு அறிமுகமாக்கிய பல்கலைக்கழக தரப்படுத்தல் போராட்டத்திற்கு பெரும் உந்துசக்தியாக இருந்தது. இளைஞர்களை போராடத்தூண்டியது. இதனைத் தொடர்ந்து வளர்ச்சியடைந்த ஆயுதப் போராட்டம் ஓர் தசாப்தத்திற்கு மேலாகியும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆனால் சிறிலங்கா அரசாங்கம் தனது பேரினவாதக்கொள்கையை விட்டுக் கொடுப்பதாக இல்லை தமிழரின் உரிமைகளை அங்கிகரிப்பதாகவும் இல்லை. இந்நிலையில் தமிழ் மக்கள் கல்வி கற்பதற்கான தமது அடிப்படை உரிமைகளை நிலை நிறுத்த ஒரே வழி தமது இனத்தின் விடுதலையை வென்றெடுப்பதற்காகப் போராடுவதேயாகும். அதாவது புத்தகங்கள் மாத்திரம் தமிழ் மாணவருக்கு பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுத் தந்துவிடாது.

என்றும் பெருன்படும்) அவர்களின் கோரிக்கைகளை நான் ஏற்றுக்கொண்டால் முழு உலகமுமே கொழுந்து விடடெரியும். உலகம இரண்டாகப் பிரியும், ஒரு பக்கம் கிறிஸ்தவ மதத்தினரும் மறுபக்கத்தில் முஸ்லிம் சமூகத்தவர்களும் இருப்பார்கள். ஆதலால் அவர்களைப் பொறுமையாக இருக்கும்படி நான் கோரினேன்.

கேள்வி:-

ஏன்?

பதில்:-

நாங்கள் இன்னும் அபாயகரமான நிலைக்கு வரவில்லை என நான் அவர்களிடம் கூறினேன். ஆனால் நான் அவர்க

செலவ லிபியாவை ஒரு இணைப்புப்பாலமாக அவர்கள் நினைக்கின்றார்கள் இது ஒரு புரட்சிவாத உண்மை நிலை எனக்கூறுகின்றனர். இதனால் மேற்குலகத்தைய தாக்கங்களையும், குடியேற்றங்களையும் தவிர்க்கமுடியுமென்று அவர்கள் நம்புகின்றனர்.

மேற்குலக நாடுகளுக்கு அடிபணிவதென்பதை அடிப்படைவாதிகள்முற்றுமுழுதாக எதிர்க்கின்றனர். பண்பாட்டு ரீதியிலோ, அரசியல்ரீதியிலோ பொருளாதார ரீதியிலோ கீழ்ப்படிய விரும்பவில்லை. அவர்களுடைய உண்மையான அடிப்படைவாதத் தத்துவங்க

என்னை அழைக்கும் எந்த அமெரிக்கப் பல்கலைக்கழகத்துக்கும் செல்ல நான் தயாராயுள்ளேன்.

கேள்வி:

உங்களைக் கேட்கும் எல்லாக் கேள்விகளுக்கும பதிலளிப்பீர்களா?

பதில்:

என்னுடன் தற்பொழுது எதிராயுள்ளவர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கும், ஏனையோர் கேட்கும் கேள்விகள் எல்லாவற்றிற்கும் பதில் அளிக்கத் தயாராயுள்ளேன்.

கேள்வி:

ஏன் இந்த புதிய நிலைப்பாடு?

மென நீங்கள் நம்புகிறீர்களா?

பதில்:

நான் உயிரோடிருக்கும்வரை லிபியா அணுகுண்டைத் தயாரிக்கமாட்டாது. அணுகுண்டு தயாரிக்கவேண்டுமென்ற எண்ணம் லிபியாவுக்கு இருந்திருந்தால் அது செயற்கை நதி ஒன்றை அமைக்க நினைத்திருக்கமாட்டாது. நான் ஒரு அணுகுண்டைத் தயாரிப்பதற்குத்தடையேதும்முண்டா? அப்படி நினைப்பது ஒரு மடைமைத்தனமான செயல் ஆகும். எவரும் அணுகுண்டு தயாரிப்பதைத்தடுக்கும் உரிமை வேறொருவருக்கும் கிடையாது எங்கள் எல்லோராலும் அணுகுண்டு தயாரிக்கமுடியும்.

குடும்பங்கள் இந்த அறிக்கையைப் பார்வையிட முடியுமா?

பதில்:

ஆம். நிச்சயமாக.

கேள்வி:

இந்த அறிக்கையின் நகல் ஒன்றை எங்களுக்குத் தரமுடியுமா?

பதில்:

உமக்கு ஒரு நகல் தருகின்றேன்.

கேள்வி:

ஆனபடியால் உங்கள் கூற்றின்படி உண்மை வேறெங்கோ உள்ளது?

பதில்:

ஆம்.

நன்றி: புரன்ட்லைன்

# தென் ஆபிரிக்க இனப்படுகொலையில் அரசுக்கும் பங்குண்டு

## - நெல்சன் மண்டேலா குற்றச்சாட்டு

(ஜோகன்னஸ்பேர்க்)

தென் ஆபிரிக்காவில் போய்ப்பட்டாங்கில், 39 பேர் இனப்படுகொலை செய்யப்பட்ட செயலில் தென் ஆபிரிக்க அரசாங்கத்திற்கும் பங்கு இருப்பதாக ஆபிரிக்க தேசிய காங்கிரசின் தலைவர்நெல்சன் மண்டேலா குற்றஞ்சாட்டியுள்ளார்.

போய்ப்பட்டாங்கில் நடைபெற்ற பேரணி ஒன்றில் பேசிய மண்டேலா இக்குற்றச்சாட்டை தெரிவித்தார். தென் ஆபிரிக்க காங்கிரஸ் அரசுடனான ஜனநாயக பேச்சுவார்த்தைகளை நிறுத்திவிட்டதாகவும், பேச்சுவார்த்தைத் திட்டம்தற்போதுசீர்குலைந்துவிட்டதாகவும், தெரிவித்தார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரசும், டி. கிளார்க் அரசாங்கமும் ஜனநாயக பேச்சுவார்த்தைகளை இன்று தொடக்குவதாக இருந்தது.

## ஹொலிபீல்ட் வெற்றி பெற்றார்

(நெவாடா)

உலக அதிபார குத்துச்சண்டை சாம்பியன் வொண்டர் ஹொலிபீல்ட் முன்னாள்சாம்பியன் லாரிஹோம் ஸுடன் நடைபெற்ற சண்டையில் வெற்றிபெற்றார்

பன்னிரண்டு சுற்றுக்கள் நடைபெற்ற இச் சண்டையில் புள்ளி அடிப்படையில் அவரது வெற்றி ஏகமனதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## இஸ்ரேலிய ஹெலிகொப்டர் தெ. லெபனானை தாக்கின

(பெய்ரூட்)

இரு இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் கடந்த வியாழக்கிழமை இரவு தெற்கு லெபனானிலுள்ள ஈரான் ஆதரவு அடிப்படைவாத தீவிர வாதிகளின் நிலைகள் மீது தாக்குதல்களை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல்களின் போது இரு வீடுகள் உடைந்து போயின என்றும், சிறுமி ஒருத்தி காயமடைந்ததாகவும், லெபனான் பொலிசார் தெரிவித்தனர். இத்தாக்குதலுக்கு பயன்படுத்திய ஹெலிகொப்டர்கள் மூன்று ஏவுகணைகளைப் பயன்படுத்தின என்றும்,

தென் லெபனானிலுள்ள இஸ்ரேலின் பாதுகாப்பு வலயத்தில் ரோந்து சென்ற இஸ்ரேல் படையினர் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளுடன் கைகலப்பில் ஈடுபட்டதைத் தொடர்ந்து ஆறு மணிநேரத்துக்குப் பின்னர் இத்தாக்குதல் இடம் பெற்றதாகவும் லெபனான் பொலிசார் தெரிவித்தனர்.

## சூலமங்கலம் ராஜலட்சுமி காலமானார்

பிரபல கர்நாடக இசைக் கலைஞர் திருமதி சூலமங்கலம் ராஜலட்சுமி நேற்று முன்தினம் காலமானார்.

பக்திப்பாடல்கள் பாடுவதில் சிறந்து விளங்கிய சூலமங்கலம் சகோதரிகளில் ஒருவரான ராஜலட்சுமி தமிழக அரசின் கலைமாமணி விருது உட்பட பல விருதுகளைப் பெற்றவர். இவர் சில திரைப்படங்களுக்கும் பின்னணி பாடியுள்ளார்.

## சர்மாவை ஆதரிக்க நரசிம்மராவ் கோரிக்கை

(டில்லி)

ஜனாதிபதி பதவிக்கு வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ள சங்கர் தயாள் சர்மாவிற்கு ஆதரவு அளித்திடுமாறு இந்திய பிரதமர் பி.வி. நரசிம்மராவ் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் கேட்டுள்ளார்

ஜப்பானுக்கு புறப்பட்டு செல்வதற்கு முன்னர் அவர் வெளியிட்ட அறிக்கையொன்றில் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களோடும் ஆலோசனை கலந்த பின்னரே இந்திரா காங்கிரஸ் கட்சி சங்கர் தயாள் சர்மாவை வேட்பாளராக நிறுத்துவதென முடிவு செய்ததாய் தெரிவித்தார்.

உப ஜனாதிபதிபதவிக்கான வேட்பாளர் பற்றி குறிப்பிடும் போது அந்தப்பதவி உண்மையில் காலியாவதற்கு முன்னரே அதற்கான வேட்பாளர்களின் பெயர்களைப் பற்றி விவாதிப்பது என்பது முறையற்றது என்று குறிப்பிட்டார்

சிறுபான்மையோர், செடுல் வகுப்பார் மற்றும் செடுல் பழங்குடி பகுதியைச் சேர்ந்தவர்கள் உட்பட பலஇனப் பிரிவினரைச் சேர்ந்த ஒரு வேட்பாளரை நிறுத்துவது பற்றி தமது கட்சி பரிசீலனை செய்யும் என்றும் நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்

## நிலக்கண்ணிவெடிக்கு இரு இராணுவம் பலி

உத்தரப் பிரதேச மாநிலத்தில் பேராவூர் மாவட்டத்தில் இடம்பெற்ற நிலக்கண்ணி வெடிச்சம்பவத்தில் எல்லை பாதுகாப்பு படையைச் சேர்ந்த இரு ராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். பதினைந்து பேர் காயமுற்றனர்.

ஈழநாதம்

# மூன்றாம் உலகநாடுகளை வேவுபார்க்க அமெரிக்கஉளவுநிறுவனத்துக்கு உத்தரவு

## அமெரிக்க ஜனாதிபதி வழங்கினார்

(டில்லி)

இந்தியாவுக்கு எதிராகவும் மற்றும் மூன்றாம் உலக நாடுகளுக்கு எதிராகவும் தன்னுடைய வேவுபார்க்கும் நடவடிக்கைகளை அதிகரிக்க அமெரிக்க உளவு ஸ்தாபனத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான முடிவை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை அமெரிக்க ஜனாதிபதியின் இந்த முடிவு குறித்து இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இத்தகைய மிரட்டல்களை எதிர்த்து முறியடிப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல்குழு நேற்று புதுடில்லியில் வெளியிட்ட அறிக்கையொன்றில் கூறியிருக்கிறது.

பூரணமான மேலான நாட்டாண்மைக்கான தன்னுடைய இயக்கத்திற்கு இந்தியாவை அடிபணிந்து வரச்செய்வதற்கான முயற்சியில் அமெரிக்கா இந்தியாவை மிரட்டி பயமுறுத்தி வருகிறது என்றும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

## நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

மட்டக்களப்பு விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி ஆசிரிய பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதி இந்துசமய கலாசார திணைக்களத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் உரிய காலத்தில் கிடைக்காத விடத்து திணைக்களப் பணிப்பாளருடன் தொடர்புகொள்ளுமாறும் விண்ணப்பிக்க தகைமைபெற்ற விண்ணப்பதாரிகளுக்கு தனித்தனி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும்,

அதேவேளை தகைமையற்றோருக்கும் திணைக்களம் கடிதம் மூலம் அறிவித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மாத்தளை நகர்ப் பகுதியில் இரவில் சோதனையிட தடை

(மாத்தளை)

மாத்தளை நகரில் மாலை 6.00 மணிக்குப் பின்னர் சிறிலங்கா படையினர் வீடுகளை சோதனையிடுவது முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக மாத்தளை பொலிஸ் நிலைய புலனாய்வுப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இதனால் யாராவது வந்து வீடுகளை சோதனையிடப் போகிறோம் என்று கூறினால் கதவுகளைத் திறக்க வேண்டாம் என்றும்,

முடியுமானால் அயலவர்களின் உதவியுடன் மடக்கிப் பிடித்து அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

## எண்ணெய்வளம் கண்டறிய இந்தியாவில் முன்னுரிமை

(சென்னை)

இந்தியாவின் எண்ணெய் வளத்தை கண்டுபிடிக்க எவ்வளவு செலவானாலும் அதற்கு முன்னுரிமை அளிக்கவேண்டுமென்று இந்திய ஜனாதிபதி ஆர் வெங்கட்ராமன் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

நாகைப்பட்டினத்தில் 114 கோடி ரூபாய் செலவிலான புதிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு அடிக்கல் நாட்டிப் பேசிய அவர் தமிழ்ப் பண்பின் நிலைக்களனாக இருந்த காவிரிப்பகுதி இப்போது தொழில் மயமாகும் எனத் தெரிவித்தார்.

## எதிர்க்கட்சி வேட்பாளரை ஆதரிக்க முடிவு

இந்திய ஜனாதிபதி தேர்தலில் எதிர்கட்சி வேட்பாளர் ஜி ஜி. சுவெல்லை ஆதரிப்பதென பாரதீயஜனதா கட்சி முடிவு செய்துள்ளது. நேற்று புதுடில்லியில் நடைபெற்ற கட்சியின் பல்வேறு தலைவர்களினது கூட்டம் இவ்வாறு முடிவு செய்தது

ஜி.ஜி. சுவெல்லை தேசிய முன்னணி கட்சிகள் ஆதரிப்பதாக முடிவு செய்திருந்தமை தெரிந்ததே.

## கலைநிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப்படிப்பு மாணவர்களின் சஞ்சிகை வெளியீட்டு நிதிக்காக எதிர்வரும் சனிக்கிழமை மாலை 6.00 மணியளவில் யாழ்ப்பாணக்கல்லூரி உள்ளக அரங்கில் விசேட கலை நிகழ்ச்சிகள் நடைபெற இருக்கின்றது. யாழ் பல்கலைக்கழக நாட்டார் வழக்கியற்கழகம் வழங்கும் ''காத்தவராயன்'' என்னும் சிந்து நடைக்கூத்தும் புகழ்மிக்க இசைக்கலைஞர்கள் இணைந்து வழங்கும் ''இன்னிசைக்கானம்'' ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற இருக்கின்றன. அனைத்து கலை ஆர்வலர்களையும் ரசிகர்களையும் யாழ்ப்பாணக்கல்லூரியின் கலையரங்கு அன்புடன் அழைக்கின்றது. (க)

## தேசிய பாதுகாப்பு பெயரில் தொழிலாளர்உரிமைமறுப்பு

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் சிறிலங்கா அரசு தொழிற்சங்க விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் சர்வதேச தொழில் ஸ்தாபனத்துக்கு (ஐ.எல்.ஓ) முறையிட்டுள்ளது

அரச கோவைகள், முக்கால் வாசிக்கு அதிகமான விவசாயம் மற்றும் தொழில் துறைகள் 1989 முதல் சிறிலங்கா அரசினால் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன என்று இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் சர்வதேச தொழில் ஸ்தாபனத்துக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு நடவடிக்கையின் கீழ் மாறமைவில் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் 500 பேர், குறிப்பாகப் பெண்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதை அரசின் அண்மைக்கால தொழிற்சங்க விரோத நடவடிக்கையென அந்தக் கடிதத்தில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## வைத்தியசாலையை

# சுத்தமாக வைத்திருப்பது நோயாளரின் கடமையாகும்

### -பணிப்பாளர் விளக்கம்

[நமது நிருபர்]

யாழ். போதனா வைத்திய சாலையை சுத்தமாக வைத்திருப்பது அங்கு சிகிச்சை பெறும் நோயாளர் ஒவ்வொருவருடைய கடமையுமாகும் என அதன் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்திய சாலையில் நிலவும் சுகாதார சீர்கேடுகள் பற்றி விளக்குகையிலேயே பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் இதுபற்றி மேலும் கூறுகையில் போதனா வைத்திய சாலையில் சுத்திகரிப்பாளர்கள் போதியளவு இல்லை இதனால் வைத்திய சாலையின் அனைத்துப் பிரிவுகளிலும் சுத்திகரிப்பு வேலைகளை முழுமையாக எந்நேரமும் மேற்கொள்வது மிகவும் கடினம் இதனால் இங்கு சிகிச்சை பெறவரும் வெளி நோயாளர்களும் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களும் வைத்திய சாலையை ஒரு பொது இடமாகக் கருதி சுகாதாரத்தை பேணும் நோக்குடன் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். கண்ட இடங்களில் துப்புதல், ஆடைகளைப் போடுதல், கழிவுப் பொருட்களைக் கண்ட இடங்களிலும் வீசுதல், கண்ட இடங்களிலும் மலசலம் கழித்தல் போன்றவற்றை தவிர்த்து போதனா வைத்திய சாலையை சுத்தமாக வைத்திருக்க ஒத்துழைக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். [ச]

# வவுனியா பகுதியில் நடமாட கடும் கட்டுப்பாடுகள்

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் நடமாடுவோர் சிறிலங்கா பாதுகாப்புப் படையினரால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரத்தை கட்டாயம் தம்முடன் எடுத்துச் செல்ல வேண்டுமென வவுனியாவில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அனுமதிப்பத்திரம் இன்றி நடமாடுவோர் கைது செய்யப்படுவார்கள் என்றும்,

வவுனியாவில் வசிப்போருக்கு நிரந்தர தற்காலிக குடியிருப்பு அனுமதி அட்டைகள் என இருவிதமான அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்றும்,

கொழும்பிலிருந்து வவுனியா வந்து வவுனியாவில் ஒரு நாள் தங்கவேண்டி ஏற்பட்டால் அவர்கள் வவுனியா புகையிரத நிலையத்தில் படையினரிடம் ஒரு நாள் தங்குவதற்கான அனுமதி அட்டையை பெற்று தங்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு நாளிலும் மேலதிகமான நாட்கள் தங்க வேண்டி ஏற்பட்டால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒருகிழமை தங்குவதற்கு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## வடக்கு கிழக்கு பல்கலைக்கழக

# 695 மாணவர்களுக்கு தென்பகுதியில் அனுமதி

வடக்குக் கிழக்கு பல்கலைக்கழகங்களில் கல்விகற்ற 695 மாணவர்கள் தென்பகுதிப் பல்கலைக்கழகங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ளனர்.

கடந்த வருடம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக் கழகங்களில் கல்விகற்று வந்த முஸ்லிம், தமிழ் மாணவர்களே தற்போது தென் பகுதியிலுள்ள பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடர பல்கலைக்கழக மானிய

## தமிழ்க்குழுக்கள்

க்கு மாகாணங்கள் இணைக்கப்படமாட்டாது என்ற ஜனாதிபதி தெரிவித்ததாகச் செய்திகள் வெளியான பின்னர் அமைச்சர் தொண்டமானுடன் அமைச்சர் ஹமீத் தொலைபேசியில் தொடர்புகொண்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்ததாகசண்டேரைம்ஸ் வெளியிட்ட கட்டுரை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது

## இ.தொ.கா

வடக்கு - கிழக்குப் பிரச்சி

## உணவுப்பொருள்

பட்டதைத் தொடர்ந்து அங்கிருந்து உணவுப் பொருள்களை யாழ் குடாநாட்டிற்குள் எடுத்துவர சிறிலங்கா இராணுவம் தடைவிதித்தது தெரிந்ததே.

இதனைத் தொடர்ந்து அந்த உணவுப் பொருள்களை இறக்குவதால் எதுவித பயனும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டிய யாழ் அரசாங்க அதிபர் மேற்படி கப்பலை பருத்தித்துறை இறங்குதுறைக்கு அனுப்பிவைக்குமாறு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மூடாக இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

## இனப்பிரச்சினை

## தனியார் மயமாக்கலைதொடர்ந்தால்

# பரா ராணுவ அமைப்பு போல் செயல் படும் நிலை வரும்

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் தொடர்ந்தும் திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்குமானால் இறுதியில் மக்கள் சொத்துக்கள் மீதான உடமை உரிமைகளை இழப்பார்கள். பொருளாதாரத்தின் மீதான வழிநடத்தல் கட்டுப்பாட்டை அரசாங்கம் இழக்கும். இறுதியில் அரசாங்கம் வெறுமனே ஒரு பரா இராணுவ அமைப்புப் போலவே செயற்படும் நிலை உருவாகும்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திர கட்சி ப. உ லக்ஷ்மன் ஜெயக்கொடி தெரிவித்தார்.

சகல துறைகளையும் தனியாரிடமும் வெளிநாட்டுக் கம்பனிகளிடமும் கையளிக்கும் கைங்கரியத்தையே அரசாங்கம் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

வெளிநாட்டுக் கம்பனிகளுடன் சேர்ந்து காரியமாற்ற சில உள்ளூர் முதலாளிகளுக்கு குறிப்பிட்ட தொழில்துறை முயற்சியில் பெரும் பங்கு கிடைப்பதில்லை. வெளிநாட்டு கம்பனிகளே சகலதையும் அனுபவிக்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

## வைத்தியசாலை

காரம் வழங்கப்பட்டபோதும் அவற்றை இங்கு கொண்டுவர அனுமதி வழங்கப்படவில்லை. சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் கடந்த காலங்களில் சேதமாக்கப்பட்ட வைத்திய சாலை கட்டடங்களைத் திருத்துவதற்கு தேவையான சீமெந்தை வழங்க இவர்கள் முற்றாக மறுத்துள்ளனர். எக்காரணம் கொண்டும் சீமெந்து

# லெப். சோழனுக்கு இறுதி அஞ்சலி

கட்டுவன் காவலரண் பகுதியில் கடந்தஞாயிறு அதிகாலை 1 மணிக்கு ஏற்பட்ட வெடி

# ''விடுதலைப்புலிகள்'' இதழ் நாளை வெளிவருகிறது

தமிழீழ விடுதலைப் புலிக

பேரினவாதமும் அதன் தீர்வுத்

# நாளை வெளிவருகிறது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான ''விடுதலைப் புலிகள்'' பத்திரிகையின் குரல் 30ஆவது இதழ் [வைகாசி-ஆனி இதழ்] நாளை வெளிவருகின்றது.

''இராணுவத் திட்டங்களின் அரசியல் நோக்கங்கள்'' என்ற தலையங்கத்திலான இவ் இதழின் ''தமிழீழ அரசியலும், தமிழ்க் குழுக்களும்'' என்ற தலைப்பிலான ஆசிரிய தலையங்கமும், ''புலிகளும் தடைச் சட்டங்களும்'', ''சிங்களப் பேரினவாதமும் அதன் தீர்வுத் திட்டமும்'', ''தமிழீழ விடுதலைப் போராட்டமும் தமிழீழமுஸ்லிம்களும்'', என்ற தலைப்புகளிலான கட்டுரைகளும், மேலும் பல அம்சங்களும் இவ்இதழில் இணைந்துள்ளன.

## விஞ்ஞானசங்க கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞானசங்க சமூகவியல் பகுதியினர் நாளை ஆயுள்வேதவைத்தியக் கருத்தரங்கு ஒன்றை ஒழுங்கு செய்துள்ளனர்.

பல்கலைக்கழக புவியியல் மண்டபத்தில் பிற்பகல் 3 00 மணிக்குஇக்கருத்தரங்கு ஆரம்பமாக உள்ளது. ''இந்திய ஆயுள்வேத வைத்தியசாஸ்திர நூல்கள் — ஓர் அறிமுகம்'' என்னும் பொருள் பற்றி திரு. எஸ். முருகவேள் (நூலகர்) கருத்துரை வழங்க இருக்கின்றார். ஆர்வமுள்ளஅனைவரையும்பங்குபற்றிக்கொள்ளுமாறு யாழ்ப்பாண விஞ்ஞானசங்கம் கேட்டுள்ளது.

## பண மோசடி

கதிர்காம விகாரைக்குச் சேரவேண்டிய இருபது லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களை மோசடி செய்ததாகக் கூறி முன்னாள் பஸநாயக்க நிலமே ஒருவர் கைது செய்யப்பட்டு உள்ளார். இவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் உறுப்பினர் எனவும் கூறப்படுகிறது.

# மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட மாணவர் அமைப்பினால் 'மேஜர்' முரளி ஞாபகார்த்தமாக விளையாட்டுவிழா ஒன்று நடாத்தப்பட உள்ளது.

இப்போட்டிகள் பாடசாலைகளின் கொத்தணி கோட்டம், மாவட்டம் என்ற அடிப்படையில் நடைபெறுமென நேற்று முன்தினம் மேற்படி அமைப்பின் செயலகத்தில் விளையாட்டுவிழா சம்பந்தமான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இவ் விளையாட்டு விழா சிறப்பாக நடைபெறுவதற்கு கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர், அதிபர்கள், ஆசிரியர்களின் ஒத்துழைப்பையும் செயற்குழு வேண்டி நிற்கின்றது.

## பல்கலை அனுமதி ஆராய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக அனுமதியில் கடைப்பிடிக்கப்படப் போகும் புதிய விதிமுறைகளால் ஏற்பட்டுள்ள பெரும் பாதிப்பு சம்பந்தமாகவும் அதற்கான எதிர் நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் ஆராய்வதற்கான கூட்டமொன்று இன்று நன்பகல் 12 00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இக் கூட்டத்திற்கு சகல பாடசாலைகளின் உயர்தர மாணவ பிரதிநிதிகள், மாணவர் தலைவர்கள், பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருக்கும் மாணவர்கள், அதிபர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறும் இவ் ஒன்றியம் கேட்டுள்ளது.

பகுதியிலுள்ள பல்கலைக்கழகங்களில கல்வியைத் தொடர பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. இது தொடர்பாக மேற்படி ஆணைக்குழு யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் இது தொடர்பான விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## தபாலகத்தில் தமிழ் அதிகாரிகள் இல்லை

(இராகலை

தமிழ் உத்தியோகத்தர்கள் இல்லையென்ற காரணத்தினால்வானொலியில்ஒலிபரப்ப பொதுமக்கள் தமிழில் எழுதிக் கொண்டு செல்லும் மரண அறிவித்தல்கள் இராகலை தபால் அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

பெரும்பான்மையாக தோட்டப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் வாழும் தமிழ் மக்கள் மரண அறிவித்தல்களைக் கொடுப்பதற்காக பதினைந்து மைலுக்கு அப்பாலுள்ள நுவரெலியா தபால் அலுவலகத்திற்கே சென்று வரவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இ.தொகா

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தர சமாதானம் ஒன்றை எட்டும்வகையில் எட்டுத்தமிழ்க்கட்சிகளும் பாராளுமன்றத் தெரிவிக் குழுவுக்கு பொதுவான ஒரு திட்டத்தைச் சமர்ப்பிக்கவுள்ளன பாராளுமன்றத் தெரிவுக் குழு மட்டத்தில் எட்டுக் கட்சிகளினதும் கூட்டு ஆலோசனையைச் சிங்களக் கட்சிகள் ஏற்றுக் கொண்டால் இந்தவருட இறுதிக்குள் நாட்டில் சமாதானம் ஏற்பட்டுவிடும்.

சிறிலங்காவில் சமாதானத்தையும், நீதியையும் ஏற்படுத்தும் பணியில் துணிரமாகக் கால் அடி எடுத்து வைப்பதுடன் பூனைக்கு மணி கட்டவும் தான் தயார் எனவும் கூறியுள்ளார் எஸ் தொண்டமான்.

அரசின்சார்பில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் தயாராகவுள்ளேன். சிங்கள-தமிழ்க் கட்சிகளுக்கிடையில் ஒரு இணக்கம் ஏற்படும் பட்சத்தில் விடுதலைப் புலிகள் முன்வந்து ஓர் அரசியல்தீர்வை ஏற்கக் கூடும் என்றும் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்கு தான் எதிரானவன் அல்ல என்று தெரியப்படுத்திய தொண்டமான், விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டுவதன் மூலம் பிரச்சினைக்கான தீர்வை எட்டிவிடமுடியாது என்று எச்சரித்துள்ளார். தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு நாம் பதிலளித்தாக வேண்டும் என்றும் தெரிவித்தார்.

சிங்களவர்-தமிழர் அநியாயமாகக் கொலை செய்யப்படுவதைப் பற்றிக் கவலை வெளியிட்டுள்ள அமைச்சர் எஸ். தொண்டமான் இந்தப் 'பைத்தியக்காரத் தனத்தை' உடன் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

விடுத்துள்ளார்.

## இனப்பிரச்சினை

வடக்குக்கிழக்கு இணைப்போ கிடைக்காதென உணரத்தொடங்கியுள்ளன.

இராணுவம் தனது இலக்குகளை எய்துவதை உறுதிப்படுத்தும் முகமாகவும் அரசாங்கம் இயல்பாகவே அரசியல் பாதையை நகர்த்திச் செல்லவும் அனைவரும் ஊகங்களுடன் காத்திருக்கவைக்கவேண்டியது அவசியமாகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது

## ஜனாதிபதி

க்கு ஆதரவாக மற்றக் கட்சிகளின் உதவியை நாடியிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறுபான்மை இனங்களின் கட்சிகள் ஒத்துழைப்பை ஆளுங் கட்சியான யு. என். பி. நாடியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆறு கட்சிகளும் சிறிமாவோவை பொது வேட்பாளராக ஆதரிக்க விருப்பம் தெரிவித்திருப்பதாக சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதே வேளை புதிதாக அமைக்கப்பட்ட கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி லலித் அத்துலத்முதலியை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த ஆலோசித்து வருவதாகஅதே;வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. காமினி திஸாநாயக்கா;கட்சியின் தலைவராகவும், தேர்தல் பிரசார அமைப்பாளராகவும் நியமிக்கப்படவுள்ளார் எனக் கூறப்படுகிறது.

## முஸ்லிம்கள்

கருத்துக்களை, ஆலோசனைகளை முன்வைக்கலாம் அதனை விடுத்து சேரிவாத, சந்தர்ப்பவாத அரசியலுக்கு துதிபாடும் கருத்துக்களை வெளியிடக் கூடாது என்றும் தெரிவித்துள்ளது.

துவதற்கு தேவையான சம்மதத்தை வழங்க இவர்கள் முற்றாக மறுத்துள்ளனர். எக் காரணம் கொண்டும் சீமெந்து யாழ்.எடுத்துச்செலல அனுமதி வழங்க முடியாது தென இக்குழுவினருக்கு கூறப்பட்டுள்ளது

இவ்வைத்தியசாலையில் நிலவும் டாக்டர்கள்பற்றாக்குறை பற்றி கேட்டபோது வடபகுதியில் சேவையாற்ற டாக்டர்கள் தயங்குகிறார்கள். யாழ். நகரில் கடமையாற்ற விரும்பும் டாக்டர்களின் பெயர்ப் பட்டியலை தம்மிடம் சமர்ப்பித்தால் தாம் அவர்களை உடனடியாக அங்கு அனுப்பி வைப்போம் என அவர்கள் இக் குழுவினருக்குத் தெரிவித்துள்ளனர்.

யாழ். போதனா வைத்திய சாலை ஊழியர்களுக்கு கஷ்ட நிவாரணப்படியை வழங்கக் கூட இவர்கள் மறுப்புத்தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக இக்குழுவினர் வினவிய போது சிவில நிர்வாகம் வடக்கில் ஏற்படும்வரை இவர்களுக்கான கஷ்ட நிவாரணப்படி வழங்கப்படமாட்டாதெனக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் முன்வைத்தகோரிக்கைகள் அனைத்தும் முற்றாக நிராகரிக்கப்பட்டதால் இக்குழுவினர்ஏமாற்றத்துடன் நேற்று யாழ். திரும்பினர்.

கட்டுவன் காவலரண் பகுதியில் கடந்தஞாயிறு அதிகாலை 1 மணிக்கு ஏற்பட்ட வெடிவிபத்தொன்றில்வீரச்சாவெய்திய லெப்டினன்ட் சேரமனின் புகழுடல் ஞாயிறு காலை 9 மணியளவில் அவரது குருநகர் இல்லத்துக்கு எடுத்து வரப்பட்டது.

அவரது இல்லத்தில் இருந்து பிற்பகல் 2. 30 மணிக்கு புலிகளின் மரியாதை அணிகளுடன் எடுத்து வரப்பட்ட புகழுடல் 3 30 மணி வரை குருநகர் சனசமூக நிலையத்தில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த வேளை நூற்றுக்கணக்கான பொதுமக்கள் வேங்கையின் புகழுடலுக்குதமது அஞ்சலியைச் செலுத்தினர். (21)

## ஆஸ்பத்திரி

பட்ட நிதியை வழங்குவதில் ஏன் தமக்கு மட்டும் இந்தப் புறக்கணிப்பு என ஊழியர்கள் அங்கலாய்ப்பதை அவதானிக்க முடிந்தது.

## விபத்துக்களில்

நேற்று வல்வெட்டித்துறையில் நடைபெற்ற மற்றுமொரு வாகன விபத்தில் ஜெயசீசர் (வயது 14) என்பவரும் காயமடைந்திருக்கிறார் (க).(ச)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

22. 06. 1992

எமது பதிவின் கடைசி இலக்கம்:- 4513

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

26-3130 26-1253, 41-6893. 26-3632, 24-5939, 26-1019, 26-3321, 42-761, 26-9283, 27-4162.

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

28-1730, 28-159. 26-2145 24-9967. 26-3390, 26-7299, 42-733 26-423, 26-1741 27-7717, 26-923, 42-3239, 28-8678. 42-849. 28-4545, 26-139, 26-3326, 27-8283, 40-6979. 25-1903.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது